## ஆய்வுப்பொருள்: இரண்டு:-
## இறையருளை வழங்கும் அருளடையாளங்கள்

9

## 2.1. தூய ஆவியின் வரங்களால் நிறைவு பெறுவோம்

* இயேசு ஆற்றலோடு போதித்தார்.
* அவரது அன்பைப் பெற்றுக்கொள்ள மக்கள் அவரைத் தேடி வந்தனர்.
* அவர் சமயத் தலைவர்களுக்கு ஆற்றல், அதிகாரத்துடனும் ஞான அறிவார்ந்த முறையிலும் பதில் அளித்தார்.
* இயேசுவைப் பின்பற்றிய மக்கள் அவரது நிபந்தனையற்ற அன்பைப் புரிந்து கொண்டனர்.
* அன்பினால் செயற்படுவது கட்டளைகளைத் தெரிந்து கொள்வதைவிட மேலானது எனவும் அவர் போதித்தார், தன் வாழ்விலும் செய்து காட்டினார்.

- கிறிஸ்து தமது வாழ்வில் மேற் கூறியவாறு செயற்படக் காரணமாயிருந்தது எது?
- காரணம் கூறுக.

இறைமகன் இயேசுவில் தூய ஆவி செயற்பட்டார். இயேசு வாக்களித்த தூய ஆவியை திருத்தூதர் பெந்தக்கோஸ்தே நாளில் பெற்றுக்கொண்டனர். அதே தூய ஆவியையே இறைவன் முதல் கிறிஸ்தவ சமுதாயத்தினருக்கும் வழங்கிப் புதுவாழ்வு வாழத் தூண்டினார்.


இலவச விநியோகத்திற்காக

## நம்பிக்கை கொண்டோரின் வாழ்க்கை முறை.

அவர்கள், திருத்தூதர் கற்பித்தவற்றிலும் நட்புறவிலும் அப்பம் பிடுவதிலும் இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள். மக்கள் அனைவரிடமும் அச்சம் நிலவியது. திருத்தூதர் வழியாகப் பல அருஞ்செயல்களும் அடையாளங்களும் நிகழ்ந்தன. நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாயிருந்தனர் எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர். நிலபுலன்களும் பிற உடைமைகளும் உடையோர் அவற்றை விற்று, அனைவருக்கும் அவரவர் தேவைகளுக்கேற்பப் பகிர்ந்தளித்தனர். ஒவ்வொரு நாளும் அவர்கள் ஒரே மனத்தோடு கோவிலில் தவறாது கூடிவந்தார்கள் பேருவகையோடும் எளிய உள்ளத்தோடும் வீடுகள்தோறும் அப்பத்தைப் பிட்டு, உணவைப் பகிர்ந்து உண்டு வந்தார்கள். அவர்கள் கடவுளைப் போற்றி வந்தார்கள் எல்லா மக்களுடைய நல்லெண்ணத்தையும் பெற்றிருந்தார்கள் ஆண்டவரும் தாம் மீட்டுக் கொண்டவர்களை நாள்தோறும் அவர்களோடு சேர்த்துக் கொண்டேயிருந்தார்.

(தி.ப. 2:42-47)

- **கீழ்வரும் பயிற்சியைச் செய்வோம்.**

| தூய ஆவியைப் பெற எதிர்பார்த்து இருந்த சமூகம் | தூய ஆவியைப் பெற்றபின் இருந்த கிறிஸ்தவ சமூகம் |
| --- | --- |
| o | o |
| o | o |
| o | o |
| o | o |
| o | o |
| o | o |



இலவச விநியோகத்திற்காக

எல்லா மக்களுடைய நல்லெண்ணத்தையும் பெற்று சாட்சிய வாழ்வு வாழ, அன்று தூய ஆவியானவர் முதல் கிறிஸ்தவர்களில் செயற்பட்டமையே காரணமாய் அமைந்தது.

அதே தூய ஆவியானவரையே நாம் உறுதிப்பூசுதல் என்னும் அருட்சாதனத்தில் பெற்றுக் கொள்கிறோம். அவரே எமக்கு வரங்களையும், கனிகளையும் தருகிறார்.

## நினைவிற்கு



நாம் பெறும் தூய ஆவியின் வரங்கள் கிறிஸ்தவ வாழ்வை நிறைவடையச் செய்கின்றன.

### தூய ஆவியானவரின் ஆன்மீகக் கொடைகள்:

- ஞானம் நிறைந்த பேச்சு
- விசுவாசம்
- நோய்களைக் குணமாக்கும் வரம்
- புதுமை செய்யும் ஆற்றல்
- இறைவாக்கு உரைக்கும் வரம்
- ஆவிகளைத் தேர்ந்து தெளியும் திறன்
- பரவசப் பேச்சு
- பரவசப் பேச்சை விளக்கும் திறன்

(1கொரி. 12:4-11)



இலவச விநியோகத்திற்காக

### திருவிவிலியத்திலிருந்து வாசியுங்கள்

எசாயா 11:2
உரோமையர் 12:6-8
எபேசியர் 4:11

## தூய ஆவியின் கனிகள்

தூய ஆவியின் வரங்களைப் பெற்று அவற்றைப் பொது நன்மைக்காகப் பயன்படுத்தும்போது, நமது வாழ்வு நற்கனி தருகின்ற மரத்துக்கு ஒப்பாகிறது. நம்மில் தூய ஆவியானவர் தம் கனிகளை விளைவிக்கின்றார். இதைப் பற்றி திருத்தூதர் பவுல்:

> ஆனால் தூய ஆவியின் கனியோ, அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் என்பவை ஆகும்.
> (கலா. 5:22)

| | |
|---|---|
| அன்பு | நிறை குறைகளோடு பிறரை ஏற்றுக்கொள்வது, சுயநலமின்றித் தியாகம் செய்வது. |
| மகிழ்ச்சி | இறை உறவில் ஏற்படும் மகிழ்ச்சி, ஏனெனில் இறைவனே மகிழ்வின் ஊற்று. |
| அமைதி | நீதியின்படி வாழ்வதால் ஏற்படுகின்ற சமாதானம். |
| பொறுமை | பிறரோடு உறவாடும்போது நம்மிடம் இருக்க வேண்டிய சகிப்புத்தன்மை, மன்னிக்கும் நிலை. |
| பரிவு | இன்முகத்தோடு பிறருக்கு உதவுதல். |
| நன்னயம் | நாமும் நன்மைத்தனத்தில் வளர்தல், பிறரும் நன்மைத்தனத்தில் வளர உதவுதல். |
| நம்பிக்கை | கடவுள்மீது ஆழ்ந்த பற்றுறுதி கொள்ளல். |
| கனிவு | கடவுளின் விருப்பத்துக்கு அமைந்து இருத்தல். மற்றவர் மட்டில் கரிசனை கொள்ளல். |
| தன்னடக்கம் | தன்னுடைய உடலையும் உள்ளத்தையும் கட்டுப்படுத்தி நேரிய வழியில் செல்லல். |


இலவச விநியோகத்திற்காக

**உறுதிப்பூசுதலின் விளைவுகள்**

பெந்தக்கோஸ்தே நாளில் திருத்தூதர்
அருட்பொழிவு செய்யப்பட்டது போல,
இவ்வருட்சாதனம் பெறும்போதும் தூய ஆவியார்
அதனைப் பெறுவோரை அருட்பொழிவு செய்கிறார்.
உறுதிப்பூசுதல் திருமுழுக்கிலே பெற்ற அருளை ஆழப்படுத்தி,
வலுப்படுத்தி அதிகரிக்கச் செய்கிறது.
'அப்பா பிதாவே' என அழைக்கத் தூண்டுகிறது.
கிறிஸ்துவோடு எம்மை உறுதியாக இணைக்கிறது.
எம்மிலே தூய ஆவியாரின் கொடைகளை அதிகரிக்கிறது.
திருச்சபையோடு எமக்குள்ள உறவை நிறைவுபடுத்துகிறது.
ஆவியாரின் அருளைத் தந்து, நம்பிக்கையைப் பரப்ப,
அதைக் காப்பாற்ற எமது சொல்லாலும், செயலாலும்
கிறிஸ்துவின் சாட்சிகளாக இருந்து அவரின் நாமத்தை
உறுதியாக அறிக்கையிடும் பொருட்டு
சிலுவையைப் பற்றி ஒருபோதும்
வெட்கப்படாமலிருக்க அருளைத் தருகிறது.

கத்தோலிக்க திருச்சபையின்
மறைக்கல்வி # *1303*

தூய ஆவியார் எம்மில் செயலாற்றும்போது நாம்
- ஞானத்தில் வளர்ச்சி பெறுகிறோம்.
- துணிவுடன் நற்செயல்களில் ஈடுபட ஆற்றலைப் பெறுகிறோம்.
- தூய ஆலயமாகிறோம்.
- இறைவார்த்தையின் ஒளியில் நடக்க தூண்டப்படுகிறோம்.

## உரையாடல்

**ஜெசிந்தா :** இன்றைக்கு என்ன ஒருநாளுமில்லாத மாதிரி மிகவும் சந்தோஷமாயிருக்கிறீர்?

**நிர்மலா :** நான் கொண்டுவந்த மதிய உணவை, கேஷினியுடன் பகிர்ந்து உண்டதால் நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். ஏனெண்டா அவ சாப்பிட்டு முடிந்ததும் 'கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக' என்று வாழ்த்தினாள்.

**ஜெசிந்தா :** அப்போ நீர் இப்ப பசியோட இருப்பீர் என நினைக்கிறன். வாரும் இருவரும் சாப்பிடுவோம். இறைவன் விரும்பும் செயலையே நீர் செய்திருக்கிறீர்.

**நிர்மலா :** நீர் இப்போ பசியாகத் தானே இருக்கிறீர்?

**ஜெசிந்தா :** இந்த உணவை நாமிருவரும் சேர்ந்து சாப்பிடுவோம். நீர் உமது உணவை கேஷினியுடன் பகிர்ந்ததுபோல, நானும் உம்மோடு என் உணவைப் பகிரப் போகிறேன்.

**நிர்மலா :** உணவை மட்டுமல்ல. எமது வாழ்வையும் நாம் மற்றவர்களோடு பகிர்ந்து வாழ வேண்டும். நாம் அடிக்கடி ஏனையோருக்கும் பணிபுரிய வேண்டும். அப்படிச் செய்தால்தான் நாம் இறைவனின் பிள்ளைகள் என அழைக்கப்படத் தகுதியாவோம்.

**பகிர்ந்து வாழ்வதன் மூலம்தான் நாம் கிறிஸ்துவோடு ஒன்றிக்க முடியும்.**

மற்றவர்களுக்காக நீங்கள் செய்யும்
ஒவ்வொரு தியாகச் செயலையும் இறைவன் விரும்புகிறார்.
இயேசு தனது வாழ்விலே இறைவனை மகிமைப்படுத்தும்
செயல்களையே செய்தார். இறைவனை மகிமைப்படுத்தி
வாழ்ந்தவர்கள் இன்றும் போற்றப்படுகின்றார்கள்.
இவ்வாழ்க்கை வாழ
எம்மைத் தூண்டுபவர் தூய ஆவியார்.

சிந்தனைக்கு :

உரோமையர் 8:1-18ஐ வாசித்து தியானிக்கவும்.

| தூய ஆவியின் வழிநடத்தலில் வாழ்பவர் | உமது வாழ்வில் |
|---|---|
| ○ ஊனியல்புக்கு அடிமையாக மாட்டார்கள்.<br>○ கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள்.<br>○ இறை உறவினால் எப்போதும் ஆன்மீக வாழ்வு பெறுபவர்கள்.<br>○ பாவத்துக்கு மரித்து புதுவாழ்வுக்கு உயிர்த்தவர்கள்.<br>○ ஆன்மீக செயல்களை முழுமனதுடன் விரும்புபவர்கள்.<br>○ வாழ்வில் அமைதியை விரும்புபவர்கள்.<br>○ இறுதியில் விண்ணகப் பேற்றினைப் பெறக் காத்திருப்பவர். | ? |

### பாடல்

வானத்திலிருந்து வையகம் எழுந்து
புனித ஆவியே வருக
ஞானத்தின் ஒளியை மனதினில் ஏற்றும்
மாசற்ற அன்பே வருக

1. உயிருக்கு உயிரே வாழ்வுக்கு வாழ்வே
உண்மையின் வடிவே வருக
பயிருக்கு மழையே பார்வையின் ஒளியே
பரமனின் அருளே வருக

2. காத்திருப்போரின் காரிருள் போக்கும்
காலைக் கதிரே வருக
ஆழ்கடல் மீதினில் அலைந்திடு மெமக்கு
ஆனந்த நிலவே வருக

3. மனிதனின் மனதில் மணியெனத் துலங்கும்
மாணிக்க விளக்கே வருக
இனிய நல் வாழ்வை உவப்புடன் வழங்கும்
இன்னருட் பெருக்கே வருக

(இறைவனைப் புகழ்வோம் # *316*)

**பயிற்சி**

1. தூய ஆவியாரின் செயற்பாட்டுக்கு ஏற்ப, பொதுநிலையினர் செயற்பட்ட சந்தர்ப்பங்களை புதிய ஏற்பாட்டிலிருந்து தேடி எழுதுக.

2. தூய ஆவியானவருக்கு சான்று பகர, கிறிஸ்தவ மாணவராகிய நீர் செய்யக்கூடிய நற்செயல்களை அட்டவணைப்படுத்துக.



இலவச விநியோகத்திற்காக

**கற்றலுக்கு :**

உரோமையர் 8:1-39

கலாத்தியர் 5:16-22

வத்திக்கான் சங்க ஏடுகள், பொதுவழிபாடு # 71

**உமது வாழ்க்கைக்கு...**

உறுதிப்பூசுதல் பெற்றுக்கொண்ட என்னிலுள்ள தூய ஆவியானவரின் செயற்பாடுகளை உலகினர் அறிந்துகொள்ள வேண்டும்.



**தூய ஆவியே வருக**